நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 349/2023

## P.W.4 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | அறிவழகன் |
| தந்தை / கணவர் பெயர் | : | – |
| கிராமம் | : | வீரக்கல் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW4 |
| வயது | : | 49 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம்,ஏப்ரல் மாதம், 17–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.16 PM

1. எனக்கு சம்பவம் தொடர்பாக வனத்துறையினர்தான் தகவல் கொடுத்து சம்பவயிடத்திற்கு வரச்சொன்னார்கள். நான் சம்பவயிடத்திற்கு போகும்போது கிராம கணக்கு பதிவேடுகளை எடுத்துச்செல்லவில்லை. நான் சம்பவயிடத்திற்கு சென்று பார்க்கும்போது அந்த இடத்தில் பருத்தி பயிடப்பட்டிருந்தது. பருத்தி காய் காய்க்கும் பருவத்தில் இருந்தது.

2. எதிரியின் வீட்டிற்கு பின்னால் அவருடைய நிலத்தில் தெற்கு பக்கமாக யானை இருந்தது. அவரது வீட்டின் வழியாக பனைமரங்கள் நடப்பட்டிருந்த இடம் வழியாகத்தான் யானை உள்ளே புகுந்தது. காட்டுக்குள் சுமார் 15 அடி உள்ளே வந்திருக்கும். காட்டுக்குள்ளேயே கம்பி நடப்பட்டிருந்தது. காட்டுக்குள் கம்பி சதுரம் சதுரமாக ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் காடு முழுவதும் கட்டப்பட்டிருந்தது.

3. நான் சென்று பார்க்கும்போது யானை அடிப்பட்ட இடத்தை தவிர மற்ற அனைத்து இடங்களிலும் கம்பி கட்டப்பட்டிருந்தது. நான் கையொப்பம் செய்த ஒப்புதல் வாக்குமூலத்தை குழந்தைவேல் என்ற வனக்காப்பாளர் எழுதினார். நான் சம்பவயிடத்தில் பிரேத பரிசோதனை செய்ய ஆரம்பிக்கும் வரை அந்த இடத்தில் இருந்தேன். அப்போது மதியம் சுமார் 2 மணியிருக்கும்.

4. அதன்பிறகுதான் அலுவலகம் வந்து சான்று வழங்கினேன். வனத்துறையினரிடம்தான் சான்று எழுதிக்கொடுத்தேன். குறிப்பாக யாரென்று தெரியவில்லை. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் ஸ்தல மகசர்களில் நான் கையெழுத்து போட்ட இடத்தில் எனது அலுவலக முத்திரையை இடவில்லை என்றால் சரிதான்.

5. நான் சொன்னவாறு நான் சம்பவயிடத்திற்கே செல்லவில்லை என்றாலும் வனத்துறையினர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சம்பவயிடத்திற்கே செல்லாமல் உரிய முறையில் ஆவணங்களை பார்வையிடாமல் தவறான சான்று வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 12.25 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**